**டிசம்பர் – 05**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு முதலமைச்சர் 2024 ஆம் ஆண்டு கலைஞர் எழுதுகோல் விருதினை தினத் தந்தியின் நிர்வாக ஆசிரியர் T.E.R. சுகுமாருக்கு வழங்கினார்.
- 26வது இருவாட்சி திருவிழா ஆனது 2025 ஆம் டிசம்பர் 01 தேதியன்று நாகாலாந்தின் கோஹிமாவில் உள்ள கிசாமாவில் உள்ள நாகா பாரம்பரியக் கிராமத்தில் தொடங்கியது.
- கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி (CMC) ஆனது அதன் 125 ஆண்டு சேவையைக் குறிக்கும் வகையில் வேலூரில் 2025 ஆம் ஆண்டு மருத்துவமனை தினக் கொண்டாட்டத்தை நடத்தியது.
- இந்தியா மற்றும் மாலத்தீவு ஆகிய நாடுகள் திருவனந்தபுரத்தில் 14வது எகுவெரின் பயிற்சியைத் தொடங்கின.
- 16 பெட்டிகள் கொண்ட இரயில் பெட்டிகள் தொடரினை 45 நாட்களில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதுடன், திருச்சியில் உள்ள பொன் மலை இரயில்வே பட்டறை முதன்முறையாக வந்தே பாரத் இரயில் பெட்டிகளை சீரமைக்கிறது.
- டார்ஜிலிங் மாண்டரின் ஆரஞ்சு ஆனது (மேற்கு வங்கம்) அதன் பாரம்பரியம், தரம் மற்றும் பிராந்திய அடையாளத்தைப் பாதுகாக்கும் விதமாக புவிசார் குறியீட்டினை (GI) பெற்றது.
- இந்தியக் கடற்படையானது, 17A திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்ட தாராகிரி எனும் நான்காவது நீலகிரி ரக போர்க் கப்பல் மற்றும் மேசகான் டாக் ஷிப் பில்டர்ஸ் லிமிடெட் (MDL) நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்ட மூன்றாவது கப்பலைப் பெற்றது.
- விசாகப்பட்டினம் ஆனது கைலாசகிரி மலை உச்சியில் உள்ள பூங்காவில் நிலத்தில் இருந்து சுமார் 862 அடி (262 மீட்டர்) உயரத்தில் அமைந்த இந்தியாவின் மிக நீளமான கண்ணாடியால் ஆன தொங்கு நடை பாதை பாலத்தினை அறிமுகப் படுத்தியது.
- டிஜிட்டல் கல்வி மற்றும் கணினி விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக உலக கணினி எழுத்தறிவு தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 02 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
- ஐக்கிய நாடுகளின் மக்கள்தொகை நிதியம் (UNFPA)-இந்திய அமைப்பானது, சர்வதேச மக்கள்தொகை அறிவியல் ஆய்வு ஒன்றியத்திற்கு (IUSSP) நிறுவனங்கள் பிரிவில் 2025 ஆம் ஆண்டு UN மக்கள்தொகை விருதை வழங்கியது.
  - மக்கள்தொகை ஆராய்ச்சி, சான்றுகள் அடிப்படையிலான கொள்கை வகுத்தல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்புக்கு IUSSP ஒன்றியத்தின் பங்களிப்புகளை இந்த விருது அங்கீகரிக்கிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கூட்ட மேலாண்மை கட்டமைப்பு

- திருவண்ணாமலையில் நடைபெற்ற கார்த்திகை தீப விழாவில் கூட்டத்தையும் வாகனங்களையும் முறையாக நிர்வகிக்க தமிழ்நாடு காவல்துறையானது முதன் முறையாக செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்தியது.
- கோயில், தெருக்கள் மற்றும் கிரிவலம் வழித்தடங்களைச் சுற்றியுள்ள நூற்றுக் கணக்கான CCTV (காட்சிப் பதிவு கண்காணிப்புக் கருவிகள்) ஒளிப்படக் கருவிகளுடன்

செயற்கை நுண்ணறிவு அமைப்பு இணைக்கப்பட்டது.

- ஒரு சதுர மீட்டரில் 4–5 பேர் கூடும்போது இந்த அமைப்பானது கூட்ட நெரிசல் ஏற்படுவதற்கான பல்வேறு எச்சரிக்கைகளை வழங்கி, காவல்துறையினருக்குக் கூட்ட நெரிசலைத் தடுக்க உதவியது.
- ஒவ்வொரு இடத்திலும் இருந்த மக்கள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கையில் 95% துல்லியமான தரவை இந்தத் தொழில்நுட்பம் காட்டியது.
- 'தீபம் 2025' செயலி மருத்துவ முகாம்கள், அவசர ஊர்திகள் (ஆம்புலன்ஸ்கள்), உணவு விநியோக இடங்கள் மற்றும் அவசரத் தொடர்புகள் பற்றிய நிகழ்நேர தகவல்களைப் பகிர்ந்தது.




# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் மின் உற்பத்தித் திறனில் மைல்கல்





- இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறன் ஆனது 2025 ஆம் அண்டு அக்டோபர் 31 ஆம் தேதி நிலவரப்படி 5.05 லட்சம் மெகாவாட் அளவினை எட்டியது.
- புதைபடிவம் சாரா எரிபொருள் அடிப்படையிலான மின் உற்பத்தித் திறன் (2,59,423 மெகாவாட்) ஆனது தற்போது புதைபடிவ சார் எரிபொருள் அடிப்படையிலான மின் உற்பத்தித் திறனை (2,45,600 மெகாவாட்) விட அதிகமாக உள்ளது.
- இந்தியா புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இருந்து 2,50,643 மெகாவாட் மின் உற்பத்தித்

திறனை எட்டியுள்ளதுடன், 2030 ஆம் ஆண்டிற்குள் 500 ஜிகாவாட் (GW) அளவிலான புதைபடிவம் எரிபொருள் அடிப்படையிலான மின் உற்பத்தித் திறனை அடைவதற்கான அதன் இலக்கினை ஆதரிக்கிறது.

- சிறிய அணு உலைகளுக்கான பணிகள் மற்றும் புதிய எரிபொருள் மேம்பாட்டுப் பணிகளின் ஆதரவுடன், 2047 ஆம் ஆண்டிற்குள் அணுசக்தி சார் உற்பத்தித் திறனை 100 ஜிகாவாட்டாக விரிவுபடுத்துவதே இதன் நோக்கமாகும்.

## GIRG கட்டமைப்பு




- இந்திய அரசாங்கம் ஆனது, சீர்திருத்தங்கள் மற்றும் வளர்ச்சிக்கான உலகளாவிய குறியீடுகள் (GIRG) முன்னெடுப்பின் கீழ் 26 உலகளாவிய குறியீடுகளை கண்காணிக்கிறது.
- தேசிய வளர்ச்சியை ஆதரிப்பதற்காக வேண்டி இந்தியாவின் தரவரிசையை மிகவும் மேம்படுத்துவதையும் அதற்கான இடைவெளிகளைக் கண்டறிந்து அவற்றை மிகவும் நன்கு மேம்படுத்துவதையும் இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பதினேழு முதன்மை அமைச்சகங்கள் இக்குறியீட்டு முறைகளை மதிப்பாய்வு செய்து துல்லியமான தரவுகளுக்காக வேண்டி சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து செயல் படுகின்றன.
- இந்தக் குறியீடுகள் பொருளாதாரம், மேம்பாடு, நிர்வாகம் மற்றும் தொழில்துறை ஆகிய நான்கு முக்கிய கருத்துருக்களை உள்ளடக்கியுள்ளது.

## சஞ்சார் சாத்தி செயலி

- இந்தியாவில் உள்ள அனைத்துப் புதிய திறன் பேசிகளிலும் சஞ்சார் சாத்தி செயலியை முன்கூட்டியே நிறுவுவதை தொலைத்தொடர்புத் துறை கட்டாயப்படுத்தியுள்ளது.
- இந்தச் செயலியானது அனைத்து தொலைத்தொடர்பு வலையமைப்புகளிலும் தொலைந்து போன அல்லது திருடப்பட்ட தொலைபேசிகளை முடக்கப் பயனர்களை அனுமதிக்கிறது.
- இது பயனர்கள் தங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்ட அனைத்து கைபேசி இணைப்புகளையும் குறித்து அறிய அனுமதிக்கிறது.
- கூடுதலாக, மோசடி தொடர்பான அழைப்புகள், குறுஞ்செய்தி அல்லது வாட்ஸ்அப் செய்திகள் குறித்து புகாரளிக்க சக்சு விருப்பத் தேர்வினை இந்தச் செயலி கொண்டு உள்ளது.

- இந்த முன்னெடுப்பின் மூலம் தொலைத்தொடர்பு வளங்களை தவறாகப் பயன்படுத்துவதை தடுப்பதையும், இணையவெளிப் பாதுகாப்பை மேம்படுத்துவதையும் அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## புதிய பிரதமர் அலுவலக வளாகம் - சேவா தீர்த்




- பிரதமர் அலுவலகம் (PMO) அமைந்துள்ள புதிய வளாகம் ஆனது சேவா தீர்த் என்று அழைக்கப்படும்.
- இது முன்னதாக மத்திய எழில்முற்ற மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் நிர்வாகப் பகுதி என்று அழைக்கப்பட்டது.
- இந்த வளாகத்தில் அமைச்சரவை செயலகம், தேசிய பாதுகாப்புச் சபையின் செயலகம் மற்றும் உயர் மட்டப் பேச்சுவார்த்தைகளுக்கான இந்திய மாளிகை ஆகியவற்றின் அலுவலகங்களும் அடங்கும்.
- இந்தப் பெயரிடல் ஆனது அதிகாரத்திலிருந்து சேவைக்கு மாறுவதை பிரதிபலிப்பதுடன், ஆளுகையை சட்டா (அதிகாரம்) அல்லாமல் சேவா (சேவை) என்று வலியுறுத்துகிறது.

- இராஜ் பவன்களை லோக் பவன்களாகவும், இராஜ்பாதை கர்தவ்யா பாதையாகவும், பிரதமரின் குடியிருப்புச் சாலையை லோக் கல்யாண் மார்க்கமாகவும் மறு பெயரிடுவது சமீபத்திய பிற பெயரிடலில் அடங்கும்.

## இந்தியாவின் முதல் மீள் நீரேற்ற விமான நிலையம்




- டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச (IGI) விமான நிலையம் ஆனது 40 மில்லியனுக்கும் அதிகமான பயணிகளின் போக்குவரத்தினைக் கையாளுகின்ற இந்தியாவின் முதல் மீள் நீரேற்ற விமான நிலையமாகும்.
- ஒரு மீள் நீரேற்ற இடம் என்பது அந்த இடத்தில் பயன்படுத்தப்படுவதை விட அதிக நன்னீரை மீளேற்றம் செய்யும் இடமாகும்.
- விமான நிலையத்தில் 625 மழைநீர்ச் சேகரிப்புக் கட்டமைப்புகள் மற்றும் 9 மில்லியன் லிட்டர் தண்ணீரைச் சேமிக்கும் இரண்டு நீர்த்தேக்க அமைப்புகள் உள்ளன.
- ஒரு நாளைக்கு 16.6 மில்லியன் லிட்டர் (MLD) கொள்ளளவிலான திரவச் சேமிப்பு கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை ஆனது அனைத்து கழிவுநீரையும் மறுசுழற்சி செய்கிறது.
- மறுசுழற்சி செய்யப்பட்ட நீர் தானியங்கி அமைப்புகள் மூலம் காற்றுப் பதனம், தோட்டக் கலை மற்றும் கழிப்பறைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.
- நிதி ஆயோக் அமைப்பின் இந்தியத் தொழில்துறை கூட்டமைப்பு (CII) ஆனது நீர் நடுநிலை கட்டமைப்பின் கீழ் இந்தச் சான்றிதழ் வழங்கப்பட்டது.


## செயலிகளுக்கான SIM சரிபார்ப்பு

- தொலைத்தொடர்புத் துறை (DoT) ஆனது வாட்ஸ்அப், டெலிகிராம், சிக்னல் மற்றும் ஸ்னாப்சாட் உள்ளிட்ட செய்தி அனுப்பல் செயலிகளில் 90 நாட்களுக்குள் கட்டாய SIM பிணைப்பை செயல்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல், பதிவு செய்யப்பட்ட SIM அகற்றப்பட்டாலோ, மாற்றப் பட்டாலோ அல்லது செயலிழக்கச் செய்யப்பட்டாலோ செயலிகள் செயலிழக்கச் செய்யப்பட வேண்டும்.
- இந்தச் செயலிகளின் வலை தள வடிவங்கள் ஆறு மணி நேரத்திற்கு ஒருமுறை பயனர்களின் கணக்குகளைத் தானாகவே வெளியேற்றி, புதிய QR அடிப்படையிலான அங்கீகாரம் தேவைப்படும் வகையிலானதாக அமைய வேண்டும்.

- தற்போதைய ஒற்றை முறைச் சரிபார்ப்பு முறையைப் போலன்றி, அசலாகப் பதிவு செய்யப்பட்ட SIM செயலில் உள்ளதா என்பதை SIM பிணைப்பு தொடர்ந்து சரி பார்க்கிறது.
- 2025 ஆம் ஆண்டு தொலைத்தொடர்பு இணையவெளிப் பாதுகாப்பு திருத்த விதிகளின் கீழ் செய்தியிடல் தளங்கள் ஆனது தற்போது தொலைத்தொடர்பு அடையாளங்காட்டி பயனர் நிறுவனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- சரி பார்க்கப்பட்ட கைபேசி அடையாளங்களுடன் இந்தச் செயலியின் செயல்பாட்டை இணைப்பதன் மூலம் இணையவெளி மோசடி, ஆள்மாறாட்டம் சார்ந்த மோசடிகள் மற்றும் பன்னாட்டுக் குற்றங்களைத் தடுப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.




## BWC உடன்படிக்கையின் 50 ஆம் ஆண்டு நிறைவு




- இந்தியா "50 Years of BWC: Strengthening Biosecurity for the Global South" என்ற சர்வதேச மாநாட்டை புது டெல்லியில் நடத்தியது.
- உயிரியல் ஆயுத உடன்படிக்கை (BWC) என்பது உயிரியல் மற்றும் நச்சுத்தன்மை வாய்ந்த ஆயுதங்களைத் தடை செய்யும் முதல் பலதரப்பு ஒப்பந்தமாகும்.
- இந்த ஒப்பந்தமானது, உயிரியல் ஆயுதங்களை உருவாக்குதல், உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், பரிமாற்றம் செய்தல் மற்றும் பயன்படுத்துவதை தடை செய்கிறது.
- 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் தேதியன்று கையொப்பமிட முன் வைக்கப்பட்ட இது 1975 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது என்பதோடு இந்தியா இதில் ஸ்தாபன அங்கம் கொண்ட நாடாகும்.

- BWC ஆனது ஐந்து ஆண்டுகளுக்கும் ஒருமுறை மறு ஆய்வு மாநாடுகளை நடத்தி, குறிப்பாக வளரும் நாடுகளுக்கு உயிரியல் அறிவியலின் அமைதியான பயன்பாட்டை ஊக்குவிக்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## சூடானில் முதல் கடற்படைத் தளம்




- ஆப்பிரிக்காவில் ரஷ்யா தனது முதல் கடற்படைத் தளத்தை உருவாக்க அனுமதிக்கும் ஓர் ஒப்பந்தத்தை சூடான் அங்கீகரித்தது.
- இந்தத் தளம் செங்கடலில் உள்ள சூடான் துறைமுகத்திற்கு அருகில் அமையும்.
- ரஷ்யா 300 பணியாளர்கள் மற்றும் நான்கு கடற்படைக் கப்பல்களை அங்கு நிலை நிறுத்த முடியும்.
- 10 ஆண்டு காலத் தன்னியல்பு நீட்டிப்புகளுடன், இதற்கான ஒப்பந்த காலம் ஆனது 25 ஆண்டுகள் ஆகும்.
- உலகளாவிய கடல்சார் வர்த்தகத்தில் சுமார் 12% செங்கடல் மற்றும் சூயஸ் கால்வாய் வழியாகச் செல்கிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவின் முதல் தனியார் வழிசெலுத்தல் மையம் – ACEN

- திருவனந்தபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆனந்த் வழிசெலுத்தல் சிறப்பு மையத்தினை (ACEN) இஸ்ரோ தலைவர் திறந்து வைத்தார்.
- ACEN என்பது ஆனந்த் டெக்னாலஜிஸ் நிறுவனத்தினால் நிறுவப்பட்ட இந்தியாவின் முதல் தனியார் துறை வழிசெலுத்தல் மையம் ஆகும்.
- இந்த மையம் ஆனது உள்நாட்டு வழி செலுத்தல் உணர்வுக் கருவிகள், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான வழி செலுத்தல் இணைவு மற்றும் NavIC (இந்தியச் செயற்கைக் கோள் திரளின் தகவல் மூலமான வழிசெலுத்தல்) அமைப்பின் சிறந்தப் பயன்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- இந்த நுட்பத்தில் வெளிநாட்டு சார்புநிலையைக் குறைக்க ACEN இந்தியாவிற்குள் வழி செலுத்தல் அலகுகளின் MRO (பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் மறுசீரமைப்பு) ஆகியவற்றை மேற்கொள்ளும்.




### பிரம்மோஸ் எறிகணை சோதனை




- இந்திய இராணுவம் ஆனது பிரம்மோஸ் மீயொலி சீர்வேக எறிகணையின் போர்ப் பயன்பாட்டு ஏவுதலை வெற்றிகரமாக நடத்தியது.
- இந்த எறிகணை பறத்தலின் போதான அதிவேக நிலைத் தன்மை மற்றும் அதன் இலக்கைத் துல்லியமாக தாக்கியதுடன் அதிக துல்லியத்தை நிரூபித்தது.
- இந்தச் சோதனையில் தெற்குப் படைப்பிரிவின் பிரம்மோஸ் பிரிவுக்கும் அந்தமான் மற்றும் நிக்கோபார் முப்படைகளுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பை உள்ளடக்கியது.

## மாநிலச் செய்திகள்

### கோனார்க் மற்றும் சர்வதேச மணல் கலை விழாக்கள் 2025

- ஒடிசா மாநில முதல்வர் 36வது கோனார்க் விழா மற்றும் 15வது சர்வதேச மணல் கலை விழாவைத் தொடங்கி வைத்தார்.
- ஒடிசாவின் கலாச்சாரத்தைக் கொண்டாடுவதற்காக ஐந்து நாட்கள் அளவிலான இந்த விழாக்கள் நடத்தப்படுகின்றன.
- சூரியக் கோவிலில் நடைபெறுகின்ற கோனார்க் விழா இந்தியாவின் பாரம்பரிய நடன வடிவங்கள் மற்றும் இசையை வெளிப்படுத்துகிறது.

- சந்திரபாகா கடற்கரையில் நடைபெறுகின்ற சர்வதேச மணல் கலை விழா தேசிய மற்றும் சர்வதேச கலைஞர்களின் மணல் சிற்பங்களைக் கொண்டுள்ளது.





## அசாமில் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் அந்தஸ்து




- ஆறு சமூகங்களுக்கு பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) அந்தஸ்தைப் பரிந்துரைக்கும் அறிக்கையை அசாம் அமைச்சரவை அங்கீகரித்தது.
- அந்தச் சமூகங்களாவன ; தாய் அஹோம்ஸ், டீ பழங்குடியினர் (ஆதிவாசிகள்), மோரன், மடக் (மோடோக்), சுடியா மற்றும் கோச்-ராஜ்போங்ஷி ஆகியோர் ஆவர்.
- இந்தச் சமூகங்கள் தற்போது அசாமின் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.
- இந்த அறிக்கையானது மேற்கொண்டு நடவடிக்கைக்காக உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்படும்.
- ST அந்தஸ்து வழங்குவது கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதையும் இந்தக் குழுக்களுக்கு சமூக மற்றும் பொருளாதார நன்மைகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பிரிவு 366 (25), அரசியலமைப்பின் நோக்கங்களுக்காக பிரிவு 342ன் கீழ் பட்டியலிடப் பட்ட பழங்குடியினராகக் கருதப்படும் சமூகங்களை STகளாக வரையறுக்கிறது.
- பிரிவு 342 பிரிவு (1) - ஒரு குறிப்பிட்ட மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தில் ST பிரிவுகளாகக் கருதப்பட வேண்டிய சமூகங்களைக் குறிப்பிட இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

- பிரிவு 342 பிரிவு (2) - இது ஒரு நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் எந்தவொரு சமூகத்தையும் ST பட்டியலில் சேர்க்க அல்லது விலக்க நாடாளுமன்றத்திற்கு பிரத்தியேக அதிகாரத்தை வழங்குகிறது என்பதோடு நாடாளுமன்றம் இதற்கான ஒரு சட்டத்தை இயற்றியவுடன், குடியரசுத் தலைவரின் அந்த உத்தரவை அடுத்தடுத்த ஒரு அறிவிப்பின் மூலம் மாற்ற முடியாது.

## e-Swathu 2.0 தளம்





- கிராமப் பஞ்சாயத்துகளில் சொத்து மேலாண்மையை டிஜிட்டல் மயமாக்குவதற்காக கர்நாடகா அரசு மேம்படுத்தப்பட்ட e-Swathu 2.0 தளத்தை அறிமுகப்படுத்தியது.
- இந்த முன்னெடுப்பு ஆனது, 95 லட்சம் கிராமப்புறச் சொத்துக்களை முறைப்படுத்தி 2,000 கோடி ரூபாய் வரை வருவாயை ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 11B கணக்குகள் வழங்கப் படுவதுடன், டிஜிட்டல் e-khata ஆவணங்கள் (படிவங்கள் 11A மற்றும் 11B) 15 நாட்களுக்குள் வழங்கப்படும்.
- இந்தத் தளமானது சொத்துப் பதிவுகளை மையப்படுத்துவதோடு, வரி மதிப்பீடு, வசூல் மற்றும் தளவமைப்பு ஒப்புதல்களை நெறிப்படுத்துகிறது.
- இதன் தொடக்கத்தின் போது 238 கிராமப் பஞ்சாயத்துகள் நிர்வாகம் மற்றும் மேம்பாட்டுச் சாதனைகளுக்காக காந்தி கிராம் விருதைப் பெற்றன.

# முக்கிய தினங்கள்


## சர்வதேச அடிமைத்தன ஒழிப்பு தினம் 2025 - டிசம்பர் 02

- இந்த நாளின் முக்கிய நோக்கம் அனைத்து வகையான நவீன அடிமைத்தனத்தையும் ஒழித்து, உலகளவில் அதனால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாகும்.
- மனிதக் கடத்தல் மற்றும் சுரண்டலுக்கு எதிரான 1949 ஆம் ஆண்டு ஐ.நா. உடன்படிக்கையின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபை இந்த அனுசரிப்பைத் தொடங்கியது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Acknowledge the past. Repair the present. Build a future of dignity and justice" என்பதாகும்.
- உலகளாவிய அறிக்கைகள் சுமார் 50 மில்லியன் மக்கள் நவீன அடிமைத்தனத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடுகின்றன.

❖ நவீன அடிமைத்தனத்தில் கட்டாய உழைப்பு, கட்டாயத் திருமணம், மனித கடத்தல் மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் போன்ற மோசமான வடிவங்கள் அடங்கும்.




## தேசிய மாசுக் கட்டுப்பாட்டு தினம் 2025- டிசம்பர் 02




❖ மாசுபாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், தொழில்துறை விபத்துகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இந்த நாள், MIC (மெத்தில் ஐசோசயனேட்) வாயு கசிவால் ஏற்பட்ட 1984 ஆம் ஆண்டு போபால் விஷவாயு துயரத்தில் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூரும் நாள் ஆகும்.

❖ இந்தியாவில் உள்ள முக்கிய மாசுபாட்டுச் சட்டங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986, காற்றுச் சட்டம் 1981 மற்றும் நீர்ச் சட்டம் 1974 ஆகியவை அடங்கும்.

❖ 1974 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட CPCB (மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்) இந்தியாவின் முக்கிய மாசுக் கண்காணிப்பு நிறுவனமாகும்.

❖ 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Sustainable Living for a Greener Future" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## ஆக்ஸ்போர்டு - 2025 ஆம் ஆண்டின் சிறந்த சொல்




- ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பதிப்பகம் ஆனது "rage bait" என்பதை 2025 ஆம் ஆண்டின் சிறந்த சொல்லாக பெயரிட்டது.
- இதன் பொருள் ஈடுபாட்டை அதிகரிக்க மக்களை கோபப்படுத்தவோ அல்லது சீண்டுவதற்கோ வேண்டுமென்றே வடிவமைக்கப்பட்ட இயங்கலை உள்ளடக்கம் ஆகும்.
- இந்தச் சொல்லானது 2002 ஆம் ஆண்டு முதல் இயங்கலையில் பயன்பாட்டில் இருந்தது என்பதோடு முதலில் யூஸ்நெட்டில் இருந்த இந்தச் சொல் முதலில் வாகனம் ஓட்டும் போது வேண்டுமென்றே எழுப்பப்படும் கிளர்ச்சி என்பதை விவரிக்கிறது.
- "rage bait" என்பது இயங்கலை உள்ளடக்கம் மற்றும் படிமுறைகள் உணர்ச்சிகளையும் நடத்தையையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை வலியுறுத்துகிறது.

## வரலாற்றுக்கு முந்தைய 'Burtele Foot'



- 2009 ஆம் ஆண்டில் எத்தியோப்பியாவில் கண்டுபிடிக்கப்பட்ட "Burtele Foot" என்று அழைக்கப் படும் 3.4 மில்லியன் ஆண்டுகள் பழமையான புதைபடிவங்களின் மர்மத்தை அறிவியலாளர்கள் தீர்த்து வைத்துள்ளனர்.
- எட்டு அடி எலும்புகள் ஆனது குரங்கு போன்ற மற்றும் மனிதன் போன்ற பண்புகளை இணைத்த ஒருங்கிணைத்த டெயிரெமெடா இனத்தைக் குறிக்கின்றன.

- இரண்டு நெருங்கிய தொடர்புடைய ஹோமினின்கள் ஒரே நேரத்தில் மற்றும் ஒரே இடத்தில் வாழ்ந்ததாகவும், மற்ற இனங்கள் ஆஸ்ட்ராலோபிதேகஸ் அஃபாரென்சிஸ் (தேன் ஆப்பிரிக்க மனிதன்) எனவும் புதைபடிவங்கள் காட்டுகின்றன.
- ஏ. அஃபாரென்சிஸ் என்பது 1974 ஆம் ஆண்டில் அஃபார் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பிரபலமான புதைபடிவ லூசியை உள்ளடக்கிய இனமாகும்.

## பண்டைய ஜோமன் மட்பாண்டங்கள்



A 10,000-year-old Jomon pottery vessel has been discovered beneath Japan's Lake Biwa using advanced underwater technology, offering new insight into prehistoric craftsmanship and early settled societies.

- 10,000 ஆண்டுகளுக்கும் மேலான மட்பாண்டங்கள் ஜப்பானின் பிவா ஏரியில் கண்டுபிடிக்கப் பட்டது.
- இந்தக் கலைப்பொருள் நீருக்கடியில் சுசுராசாகி இடிபாடுகளில் 64 மீட்டர் ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- ஆரம்பகால ஜோமோன் காலத்தைச் சேர்ந்த இந்தக் கப்பல், 25 சென்டிமீட்டர் உயரம் கொண்டது.
- இது ஆரம்பகால பீங்கான் கைவினைத் திறனைப் பிரதிபலிக்கும் நுட்பமான வேலைப் பாடுகளைக் காட்டுகிறது.
- பிவா ஏரி ஆனது ஜப்பானின் மிகப்பெரிய நன்னீர் ஏரி மற்றும் வரலாற்றுக்கு முந்தைய ஆராய்ச்சிக்கான முக்கியத் தளமாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★